<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 242/2019 நாள்: 11.02.2026 வா.சா.1 – விக்னேஷ்குமார்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>**

வா.சா.ஆ.5 ஆவணத்தில் மேற்படி பூமியில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறு ஒன்றை எனது தாயார் நாளது தேதியில் சண்முகசுந்தரம் அவர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது தாயார் சண்முகசுந்தரத்திற்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி **கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1**. மேற்படி கிரைய ஆவணம் வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதியன்றே எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 விடுதலை ஆவணத்தின் அடிப்படையில் தனக்கு சொத்து கிடைத்ததாக மேற்படி சண்முகசுந்தரத்திற்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சண்முகசுந்தரத்திற்கு எனது தாயார் எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி சண்முகசுந்தரத்திற்கு எழுதி கொடுத்த பி.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் நான் முதல் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.5 ல் உள்ள கையொப்பங்களை எந்த சூழ்நிலையில் நான் போட்டேன் என்ற விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தையார் காலமான பிறகு எனது தாயார் என்னையும், எனது மூத்த சகோதரிகள் 3 பேரையும் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். எனது தாயார் என்ன வேலை பார்த்தார் என்ற விவரத்தை நான் தாக்கல்

செய்துள்ள வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது சகோதரிகளின் திருமணத்தை எனது தாயார் தான் நடத்தி வைத்தார் என்றால் சரிதான். 2005 ம் ஆண்டு முதல் 2019 ல் இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் நான் இருந்தேன் என்பதை காட்டுவதற்கு எவ்வித ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சுவாதீனத்தில் இல்லாததால் நான் இந்த வழக்கில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்றால் சரியல்ல. 2005 ம் ஆண்டிற்கு பிறகு தாவா சொத்தில் பாகம் கோரி எனது தாயாருக்கோ, எனது சகோதரிக்கு எதிராகவோ எவ்வித வழக்கறிஞர் அறிவிப்பும் நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். எனது தாயார் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை. வா.சா.ஆ.4 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை மேற்படி கிரையங்களை பொறுத்து எதற்காக ஆட்சேபனை செய்யவில்லை என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது நான் வழக்கறிஞர் ஆகிவிட்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் **கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல்கள்** நான், எனது தாயார் எனது சகோதரிகள் மூவரும் சேர்ந்து கிரையம் கொடுத்த ஆவணங்கள் மேற்படி கிரைய ஆவணங்களை வா.சா.ஆ.1 பாகபிரிவினை மூல ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டவை என்றால் சரிதான். அவைகள் முறையே **கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல்கள் பி.சா.ஆ.2 முதல் 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பி.சா.ஆ.2 முதல் 7 வரை கிரைய ஆவணங்கள் மூலம் செய்த கிரையத்தின் படி கிடைத்த மறுபயனின் அடிப்படையில் தான் எனது தாயார் எனது சகோதரிகளை திருமணம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது தந்தையார் காலமான பிறகு எனது தாயாருக்கு வேறு வருமானம் எதுவும் இல்லாததால் தாவா சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த வருமானத்தின் அடிப்படையில் தான் என்னையும், எனது சகோதரிகளையும் எனது தாயார் பராமரித்து வந்தார் என்றால்

சரியல்ல. நான் வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலமாக விடுதலை பத்திரம் எழுதி கொடுக்கும் போது மீத 3.28 ஏக்கர் இருப்பதாக மேற்படி ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தாயார் வா.சா.ஆ.5 ஆவணத்தின் படி 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு 3.05 ஏக்கரை விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்குரையில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் விற்பனை செய்தது போக வா.சா.ஆ.4 ல் குறிப்பிட்டுள்ள 23 செண்ட் என்ன ஆனது என்றால் சாட்சி தெரியவில்லை என்று கூறுகிறார். வழக்கு தாக்கல் செய்யும் போது மேற்படி 3.05 ஏக்கர் நிலம் யார் பெயரில் பட்டாவாக உள்ளது என்று நான் பார்த்தேனா என்றால் சாட்சி பார்க்கவில்லை என்று கூறுகிறார். இந்த வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 14 வருடங்கள் கழித்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் நீதிமன்ற கட்டணம் சரியாக இந்த வழக்கில் செலுத்தாததாலும், தாவாவை சரியாக மதிப்பிடாததாலும் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 முதல் 7 ஆவணங்கள் மூலமாகவும், வா.சா.ஆ.5 மூலமாகவும் கிடைத்த மறுபயனில் நானும் எனது சகோதரியும் பயனடைந்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.11 17:00:26 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.